Padasalai

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –6
ந.க.எண் 129/பிடி1/2018, நாள்: .07.2019.

---

பொருள் பள்ளிக் கல்வித் துறை – மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – 7726 அரசு/அரசு உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஆதார் எண் இணைந்த தொட்டுணர் கருவி முறையிலான வருகைப் பதிவேடு முறைமை (AEBAS – Aadhaar Enabled Biometric Attendance System) அமல்படுத்தப்பட்டது – இரண்டாம் கட்டமாக பஞ்சாயத்து யூனியன் / அரசு / அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 413 வட்டாரக் கல்வி அலுவலர்கள் வாயிலாக ஆதார் எண் இணைந்த தொட்டுணர் கருவி BAS மென்பொருளை நிறுவி, AEBAS வருகைப் பதிவேடு முறையிலான பணிகளை மேற்கொள்வதற்கான அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை

1. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.129/பிடி1/2018, நாள்: 09.06.2018.
2. அரசாணை (நிலை) எண்.225, பள்ளிக் கல்வி (ஆதேவா)த்துறை, நாள் 25–10–2018.
3. சென்னை–9, அரசு முதன்மைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நாள். 11.02.2019.
4. அரசு மின்னணு சந்தைப்படுத்துதல் Bid No.GEM/2019/B/195603 Dated 01–03–2019.
5. நாடாளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அறிவிப்பு நாள் : 10.03.2019.
6. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 129/பிடி1/2018, நாள்: 27.03.2019.
7. சென்னை–9, அரசு முதன்மைச் செயலாளரின் கடித ந.க.எண்.8083/ஆதேவா/2019–1, நாள்: 02.05.2019.
8. பள்ளிக்கல்வி இயக்குநரின் ந.க.எண். 129/பிடி1/2018, நாள். 24.05.2019.
9. அரசு மின்னணு சந்தைபடுத்துதல் ஒப்பளிப்பு எண். (Gem Portal) Sanction Order No. 511687787518814, Sanction Dated: 24.05.2019.
10. அரசு மின்னணு சந்தைபடுத்துதல் ஒப்பளிப்பு எண். (Gem Portal) Contract Order No.GEMC -511687787518814, Generated Dated: 24.05.2019.
11. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 129/பிடி1/2018, நாள்: 08.07.2019.

---

அரசு / அரசு உதவிபெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களுக்கு ஆதார் எண் இணைந்த தொட்டுணர் கருவி முறையிலான வருகைப் பதிவேடு முறைமை (AEBAS–Aadhaar Enabled Biometric Attendance System) நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, AEBAS பயிற்சிப் பட்டறை மாநில அளவில் 10.12.2018 முதல் 12.12.2018 முடிய நடைபெற்றது. அதில், ஒரு மாவட்டத்திற்கு 10 பணியாளர்கள் வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 330 (Key Resource Persons) பணியாளர்களுக்கு சென்னை –90, தேசிய தகவலியல் மைய முதுநிலை தொழிற்நுட்ப வல்லுநர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இரண்டாவது கட்டமாக 8179 அரசு / அரசு நிதியுதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஆதார் எண் இணைந்த தொட்டுணர் கருவிகள் (Model Number MFS-100) மந்த்ரா நிறுவனத்தின் மூலம் 413 வட்டாரக் கல்வி அலுவலகங்களுக்கு தூதஞ்சல் (Courier) மூலம்

வழங்கப்பட்டு வருகிறது. இது சார்ந்த சுற்றறிக்கை 08.07.2019 நாளிட்ட செயல்முறைகளில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக வட்டாரக் கல்வி அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கடைப்பிடிக்குமாறு அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஒரு வருவாய் மாவட்டத்திற்கு 10 பணியாளர்கள் என்ற அளவில் 32 மாவட்டங்களில் 330 (உயர்நிலை / மேல்நிலை / மாவட்டக்கல்வி அலுவலகம்) பணியாளர்களுக்கு (KRP) பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- வட்டாரக்கல்வி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் ஆதார் எண் இணைந்த தொட்டுணர் கருவி, BAS மென்பொருளை நிறுவி, AEBAS வருகைப் பதிவேடு முறையிலான பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக கணினி இயக்கத் தெரிந்த பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து, ஏற்கனவே வருவாய் மாவட்ட அளவில் AEBAS பயிற்சி பட்டறையில் பங்கேற்ற KRP பணியாளர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வட்டாரக்கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கையை (No. of Block) அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே பயிற்சி பெற்ற KRP தலைமையில் குழு உருவாக்கப்பட்டு, பணிகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- மாவட்டக் கல்வி அலுவலர்களால் ஏற்கனவே பயிற்சி பெற்ற KRP பணியாளர்களை கொண்டு வட்டாரக் கல்வி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய KRPக்கு செய்முறை, 1 அல்லது 2 பள்ளிகளில் நிறுவ உதவி புரிவர். மீதமுள்ள அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் புதிய KRP மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- புதிய KRPக்கு AEBAS சம்மந்தமாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் பழைய KRP களிடம் தொடர்பு கொண்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட வேண்டும்.
- ஏற்கனவே மாநில அளவில் பயிற்சி பெற்ற KRPகளுக்கு AEBAS சார்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின், அந்தந்த மாவட்டத்தில் உள்ள தேசிய தகவலியல் மைய (NIC) அதிகாரிகளை அணுகி சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.
- AEBAS நடைமுறைபடுத்துவதற்கான வழிகாட்டி கையேடு (User Manuals) முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- AEBASக்கான அனைத்துப் பணிகளும் முடிவுற்றதும் சார்ந்த வட்டாரக்கல்வி அலுவலர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினைப் பூர்த்தி செய்து அறிக்கையாக சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன் நகலினை (scanned copy) பள்ளிக்கல்வி இயக்கக "எப்" பிரிவு மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். ( fsec.tndse@nic.in ).

- வட்டாரக் கல்வி அலுவலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையினை முதன்மைக்கல்வி அலுவலர்கள் வருவாய் மாவட்ட அளவில் தொகுத்து, தொகுப்பறிக்கையாக இவ்வியக்கக இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட அறிவுரைகளைச் சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவிக்கலாகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர் 4/4

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்
1.அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள். (தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது) .
2.தொடக்கக் கல்வி இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்ககம்,
சென்னை–6. (தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது)
3. திரு.ஜெ. ஹட்சன் ஜெபகுமார், முதுநிலை தொழிற்நுட்ப இயக்குநர்,
தேசிய தகவலியல் மையம், எண். E2A, இராஜாஜி பவன்,
பெசன்ட் நகர், சென்னை – 90. (தகவலுக்காக அனுப்பப்படுகிறது)